

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.6.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையில் 85 தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் 48 வேளாண்மை அலுவலர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை – உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் – முனைவர். பொ.சங்கர், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (29.6.2024) தலைமைச் செயலகத்தில், ஆண் மற்றும் பெண் காவலர்கள் சந்தித்து, காவல்துறை மானியக் கோரிக்கையில், காவலர்களுக்கான புதிய குடியிருப்புகள் கட்டுதல், பணியின்போது உயிர்இழப்போ / உடல் ஊனமோ / காயமோ ஏற்பட்டால் வழங்கப்படும் கருணைத் தொகையை உயர்த்தி வழங்குதல் போன்ற பல்வேறு அறிவிப்புகளை அறிவித்தமைக்காக நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை மாநகர காவல் ஆணையர் சந்தீப் ராய் ரத்தோர் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### அணுகுமுறையில் மாற்றமில்லை!

# மோடி மோதல் போக்கையே கடைப்பிடித்து வருகிறார்!

## திருமதி சோனியாகாந்தி குற்றச்சாட்டு!

*புதுடெல்லி, ஜூன் 30-*

கருத்தொற்றுமையை மற்றவர்களுக்கு போதிக்கும் பிரதமர் மோடி, எப்போதும் மோதல் போக்கையே கடைப்பிடித்து வருவதாக காங்கிரஸ் நாடாளுமன்றக் குழுத் தலைவர் சோனியா காந்தி விமர்சித்துள்ளார். நாடாளுமன்றத்தின் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளுக்கு எதிர்க்கட்சிகள் உறுதியான பங்களிப்பை வழங்கும் என்றும் அவர் உறுதி அளித்துள்ளார்.



*Preaching consensus, provoking confrontation* என்ற தலைப்பில் சோனியா காந்தி எழுதி உள்ள கட்டுரையை 'தி இந்து' ஆங்கில நாளிதழ் வெளியிட்டுள்ளது. கடந்த ஜூன் 4ம் தேதி நாட்டு மக்கள் தெளிவான தீர்ப்பை அளித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார். மக்களின் இந்த தீர்ப்பு, தனக்கு தெய்வீக நிலை உள்ளதாக பிரச்சாரம் செய்த பிரதமர் மோடிக்கு தனிப்பட்ட முறையிலும் அரசியல் மற்றும் தார்மீக முறையிலும் கிடைத்த தோல்வி என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீர்ப்பின் மூலம், பிரதமர் மோடியின் பாசாங்குகளை மட்டுமின்றி, அவரது பிரிவினைவாதம், வெறுப்பு அரசியல் மற்றும் மோடியின் நிர்வாக முறையை சந்தேகத்திற்கு இடமின்றி இந்திய மக்கள் முற்றிலுமாக நிராகரித்துள்ளனர் என்று சோனியா காந்தி விமர்சித்துள்ளார்.

ஆனால், மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு மாறாகவே பிரதமர் மோடியின் செயல்பாடுகள் தொடர்வதாகவும், கருத்தொற்றுமையை மற்றவர்களுக்கு போதிக்கும் பிரதமர் மோடி எப்போதும் மோதல் போக்கையே ஊக்குவிக்கிறார் என்றும் சோனியா காந்தி குற்றஞ்சாட்டியுள்ளார்.

18வது மக்களவையின் முதல் சில நாட்களிலேயே பிரதமர் மோடியின் அணுகுமுறையில் மாற்றம் இருக்கும் என்ற நம்பிக்கை பொய்த்து போய்விட்டதாகவும், ஒன்றிய அரசின் போக்கில் மாற்றம் ஏற்படலாம் என்ற நம்பிக்கை சிதைக்கப்பட்டுள்ளதாகவும் சோனியா காந்தி விமர்சித்துள்ளார்.

சபாநாயகர் தேர்வு குறித்து அரசுத் தரப்பில் இந்தியா கூட்டணியை அணுகியபோது, மரபுப்படி, துணை சபாநாயகர் பதவியை எதிர்க்கட்சியைச் சேர்ந்த ஒருவருக்கு அளித்தால், ஆளும் தரப்பில் நிறுத்தப்படும் வேட்பாளரை ஆதரிக்க தயாராக உள்ளதாக தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால், ஆளும் கட்சி இதற்கு உடன்படவில்லை என்றும் தெரிவித்துள்ள சோனியா காந்தி, 17வது மக்களவையில் துணை சபாநாயகர் பதவி நிரப்பப்படாமல் இருந்ததையும் சுட்டிக் காட்டி உள்ளார்.

'நீட்' மோசடி குறித்து தற்போது பிரதமர் மோடி மவுனம் சாதித்தாலும் கடந்த 10 ஆண்டுகளில் யு.ஜி.சி. மற்றும் என்.சி.இ.ஆர்.டி. அமைப்புகளை சிதைத்துவிட்டதாக சோனியா காந்தி குற்றம் சாட்டி உள்ளார். 400 தொகுதிகளில் வெற்றி என்ற மோடியின் விருப்பத்தை மக்கள் நிராகரித்தபோது, அம்மக்களின் முடிவுக்கு பிறகாவது பிரதமர் மோடி சுயபரிசோதனை செய்து பார்க்க வேண்டாமா என்று சோனியா காந்தி வினவியுள்ளார்.

# கள்ளச்சாராயம் விற்பனை செய்தால் ஆயுள்தண்டனை!

## சட்டப்பேரவையில் மதுவிலக்கு சட்டத் திருத்த மசோதா - அமைச்சர் சு. முத்துசாமி தாக்கல் செய்தார்!

**சென்னை, ஜூன் 30-**

**சட்டப்பேரவையில் தமிழ்நாடு மதுவிலக்கு சட்டத் திருத்த மசோதாவை அமைச்சர் முத்துசாமி தாக்கல் செய்தார். கள்ளச் சாராயத்தை முற்றிலுமாக ஒழிக்கும் வகையில் அதை தயாரிப்பது விற்பனை செய்பவர்களுக்கு ஆயுள் வரை கடுங்காவல் தண்டனையோடு, 10 லட்சம் ரூபாய் வரை தண்டனை தொகையை உயர்த்தி கடுமையான தண்டனைகளையும் விதிப்பதற்கான தமிழ்நாடு மதுவிலக்கு திருத்த சட்ட மசோதா சட்டப்பேரவையில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.**

**மேலும் குற்றவாளிகள் பிணையில் வெளியே வர முடியாத வகையிலும், பிணையில் வெளிவரும் நபர் இது போன்ற செயல்களில் ஈடுபட மாட்டார் என நீதிமன்றத்தால் கருதும் வகை யிலும், பிணை குற்றவாளி களுக்கு வழங்கக் கூடாது என்பதை சேர்த்துக் கொள்ளலாம்**

**பெரும் குற்றங்களில் ஈடுபடும் குற்றவாளிகள் சிறையில் இருந்து வெளியில் வரும் நிலை உள்ளது. அந்த நிலை உருவாவதை தடுக்கும் வகையில் இந்த சட்டத்தை மேலும் வலுவாக்க வேண்டும். மகாராஷ்டிராவில் இது போன்ற திருத்தங்கள் ஏற்கனவே மேற்கொள்ளப் பட்டுள்ளது.**

**இவ்வாறு அம்மசோதாவில் கூறப்பட்டுள்ளது.**

### பேருந்து நிலையம் அருகில் - போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான இடத்தில் 'மல்டி லெவல்' கார் பார்க்கிங் அமைக்க ஏற்பாடு!

# கொடைக்கானலில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பதில்!

**சென்னை, ஜூன் 30-**

**சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது, பழனி தொகுதி கழக சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார், கொடைக்கானலில் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க – 'மல்டி லெவல்' கார் பார்க்கிங் அமைத்திட போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமான இடத்தை நகராட்சித் துறைக்கு வாடகைக்கு வழங்கிட வேண்டுமெனக் கோரினார். அதற்குப் பதிலளித்த போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கரும், கழக உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமாரின் கோரிக்கை நிறைவேற்றப் படும் என பதிலளித்தார்.**



சட்டப் பேரவையில் இது தொடர்பாக நடைபெற்ற விவாதம் வருமாறு:–

**ஐ.பி.செந்தில்குமார்:** கொடைக்கானல் முதல் வில்பட்டி ஊராட்சி, பேத்துப்பாறை வரை புதிய வழித்தடத்தில் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** கொடைக்கானல் முதல் வில்பட்டி ஊராட்சி, பேத்துப்பாறை வரை அமைந்துள்ள சாலையானது பயணிகள் பேருந்து இயக்குவதற்கு ஏற்றதாக இல்லை என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஐ.பி.செந்தில்குமார்:** கொடைக்கானல் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட வில்பட்டி ஊராட்சியின் முக்கிய கிராமமாக இருக்கக்கூடியது பேத்துப்பாறை. பெருமாள் மலை பழனி பிரிவு முதல் பேத்துப்பாறை வரை 2 கிலோ மீட்டர் தொலைவு உள்ளது. அதற்குப் பிறகு பாரதி அண்ணா நகர், கணேசபுரம், கும்பூர்வயல் ஆகிய கிராமங்கள் இருக்கின்றன. கிட்டத்தட்ட 800க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் அங்கு வசித்து வருகிறார்கள். அவற்றில், 200 குடும்பத்தினர் பழங்குடியின சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மருத்துவ உதவி பெற கொடைக்கானலுக்கு வர வேண்டுமென்றால், 15 கிலோ மீட்டர் தூரம் வர வேண்டும். கிட்டத்தட்ட 7 கிலோ மீட்டரிலிருந்து 2 கிலோ மீட்டர் வரை, அதாவது, பேத்துப்பாறையிலிருந்து 2 கிலோ மீட்டர் பிரிவு, அதேபோல பாரதி அண்ணா நகர், கணேசபுரம், கும்பூர்வயல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் 6, 7 கிலோ மீட்டர் தூரம் நடந்துதான் வர வேண்டும். அவர்கள் மருத்துவ வசதியைப் பெற பேருந்தை பிடிப்பதற்கு இத்தனை கிலோ மீட்டர் தூரம் நடந்து வர வேண்டும்.

அதேபோல், பள்ளிக் குழந்தைகள், பெருமாள் மலையில் இருக்கக்கூடிய பள்ளிக்கு வர கிட்டத்தட்ட 8 கிலோ மீட்டர் வர வேண்டும். ஆக அவர்கள் நடந்து வர வேண்டிய சூழலில் இருக்கின்றார்கள். யானைகள் நடமாட்டம் இருக்கின்றன. காட்டு மாடு, சிறுத்தைகள், பல வன விலங்குகளுடைய நடமாட்டம் அதிகம் இருக்கக்கூடிய பகுதி. ஊராட்சி ஒன்றியத்தினுடைய சாலை 4 மீட்டர் அகலத்தில் 12 அடியில் இருக்கிறது. இங்கே ஒரு Cut chase bus. அந்த Cut chase buses விடுவதற்குரிய வழிவகை அங்கே இருக்கிறது. எனவே, ஒரு புதிய வழித்தடத்தை போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அந்த மலைவாழ் மக்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும்

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் கேள்வியில் கேட்டிருந்த அந்தப் பேத்துப்பாறை என்ற கிராமத்தை யொட்டித்தான் பதில் தயாரிக்கப்பட்டிருக்கிறது. பேத்துப்பாறை, கொடைக்கானல் பழனி வழித்தடத்தில் அமைந்திருக்கின்ற பேத்துப்பாறை பிரிவிலிருந்து உள்ளே 1.5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கிராமம். இந்த வழித்தடத்தில், ஏற்கெனவே 22 தனி நடைகள் பேருந்துகள் இயங்கி வருகின்றன. அதேபோல், கொடைக்கானல் பெரும்பள்ளம் பேத்துப்பாறை வழியாகச் செல்கின்ற 6 தனி நடைகள் என மொத்தம் 28 தனி நடைகள் பேருந்துகள் இயங்கி வருவதால், பேத்துப்பாறை கிராமத்திலிருந்து பேத்துப்பாறை பிரிவிற்கு ஒன்றரை கிலோ மீட்டர் தொலைவில் பேருந்தை பிடிக்கலாம் என்று துறையின் மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தற்போது நம்முடைய உறுப்பினர் அவர்கள், அதற்கு உள்ளே இருக்கின்ற கிராமங்கள் 6 கிலோ மீட்டர் தொலைவிலிருந்து வர வேண்டும் என்பதனை குறிப்பிடுகிறார். அவர் சொல்வது நியாயம். பள்ளி மாணவர்கள், வன விலங்குகள் நடமாடுகின்ற பகுதியிலே வருவது சிரமம். எனவே, மீண்டும் அந்தப் பாதையில் உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அளவிற்கு சிறிய பேருந்துகள் இயக்குவதற்கு ஏற்றதாக இருந்தால், மீண்டும் பார்வையிடச் சொல்லி, அதனை இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏற்கெனவே மலைப் பகுதிகளுக்கு பேருந்து விட வேண்டுமென்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எங்களுக்கு அளித்திருக்கின்ற அறிவுரை. முதலமைச்சர் அவர்களே நேரடியாக தர்மபுரி மாவட்டத்தில் இருக்கிற வத்தல் மலைக்குச் சென்றபோது, அந்த மக்கள் வைத்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, அங்கே பேருந்துகளை இயக்குவதற்கு ஆணையிட்டு, அங்கே பேருந்துகள் இயக்கப்படுகின்றன. அதேபோல், நம்முடைய உறுப்பினர் நந்தகுமார் அவர்கள், அவருடைய அணைக்கட்டு தொகுதி, பீஞ்சமந்தை என்ற ஒரு கிராமத்திலிருந்து பேருந்து விட வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருந்தார். எனவே, இந்த ஆண்டு புதிதாக வாங்கப்படுகின்ற பேருந்துகளில், மலைப் பகுதிகளில் இயக்குவதற்கு கூடுதல் பேருந்துகள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறோம். அங்கே பேருந்துகள் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

எனவே, உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் சொல்லியிருக்கின்ற அந்தப் பாதை, மீண்டும் பார்வையிடப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்படும் .

**ஐ.பி.செந்தில்குமார்:** அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. மக்கள் முதல்வர், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும் நான் இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏனென்று சொன்னால், கடந்த 10 ஆண்டுகளாக அங்கே மாற்றப்படாமல் இருந்த பழைய பேருந்துகள், மிகவும் மோசமான நிலையிலிருந்த பழைய பேருந்துகளை மாற்றுகின்ற பணியை இந்த அரசு இன்றைக்கு துவங்கியிருக்கிறது. அதன் பயனாக, என்னுடைய பழனி சட்டமன்றத் தொகுதி, கொடைக்கானல் மலைப் பகுதிக்கு 4 பழைய வழித்தடங்களில் இயங்குகின்ற பேருந்துகளுக்கு புதிய பேருந்துகளை போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்.

எனவே, முதல்வர் அவர்களுக்கும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்தில் நன்றியை எனது தொகுதி மக்களின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

துறை சார்ந்த ஒரு கேள்வி; தயவு கூர்ந்து, போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் என்னை தவறாக எடுத்துக்கொள்ளக் கூடாது.

நம்முடைய போக்குவரத்துத் துறைக்குச் சொந்தமாக கொடைக்கானல் பேருந்து நிலையத்தின் அருகில் கிட்டத்தட்ட 3 ஏக்கர் நிலம் இருக்கிறது. கொடைக்கானல் நகரம் இன்றைக்கு உலக சுற்றுலாத் தலங்களில் ஒரு முக்கியமான இடமாக இருக்கிறது. ஏற்கெனவே நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தெரியும். நம்முடைய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பி. ஐயா அவர்களுடைய தலைமையில் அவரை சந்தித்து, அங்கே ஏற்படுகிற கடும் போக்குவரத்து நெரிசல் (traffic jam) குறித்து கோரிக்கை வைக்கப்பட்டது. அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. அதனை தவிர்க்க வேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்திருக்கிறோம். ஏனென்று சொன்னால், அங்கே car parking அமைக்க வேண்டும்; Multi level car parking எல்லாம் அமைக்க வேண்டுமென்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களிடமும் சொல்லி, அவர்களும் கருத்துருக்களை கேட்டுப் பெற்றிருக்கிறார்கள்.

நான் போக்குரத்துத் துறை அமைச்சரிடத்தில் பணிவோடு சமர்ப்பிப்பது என்னவென்று சொன்னால், நம்முடைய நகராட்சி நிர்வாகத்தின் சார்பில் அந்த 3 ஏக்கர் நிலத்தை உங்களிடத்தில் ஆண்டு வாடகைக்குக் கேட்டு, ஒரு கருத்துருவை உங்கள் துறைக்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்த இடத்தை ஆண்டு வாடகைக்கு நீங்கள் அவர்களுக்கு வழங்குவீர்களேயானால், அந்தப் பேருந்து நிலையத்தின் அருகில் இருக்கக்கூடிய இடத்தில் அங்கே ஒரு பொது வாகன நிறுத்தமிடத்தை எற்படுத்தினால், கொடைக்கானல் நகரத்தின் மையப் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதை தவிர்ப்பதற்கு ஒரு நல்ல வழிவகை ஏற்படும்.

எனவே, நம்முடைய நகராட்சி நிர்வாகத்தின் மூலமாக உங்களிடத்தில் கேட்கவிருக்கக்கூடிய அந்த வேண்டுகோளை நீங்கள் ஏற்று, அந்த நிலத்தை நகராட்சி நிர்வாகத்தினுடைய பொது வாகன நிறுத்த பயன்பாட்டிற்கு வழங்க வழிவகை ஏற்படுத்தித் தர வேண்டும்.

**அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர்:** உறுப்பினர் ஐ.பி. செந்தில்குமார் அவர்கள் கொடைக்கானல் உலக பிரசித்தி பெற்ற சுற்றுலாத் தலம் என்று குறிப்பிட்டார்.

அங்கே பல்வேறு அமைச்சர்களை அழைத்துச் சென்று, சுற்றுலாப் பகுதிகளை சுற்றிக் காண்பித்து கொண்டிருக்கிறார். இது வரை என்னை அவர் அழைக்கவில்லை. அழைத்தால், (சிரிப்பு) நேரடியாகச் சென்று அந்த இடத்தைப் பார்வையிட்டு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள், அந்த இடத்தை எடுத்துக்கொள்கிறேன் என்று இப்பொழுதே உத்தரவாதம் அளித்துள்ளார். துறைரீதியாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, அது வழங்கப்பட்டு, போக்குவரத்து நெரிசலை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுப்பதற்கு போக்குவரத்துத் துறை உறுதுணையாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாகத் தெரிவு செய்யப்பட்ட

# வேளாண்மை அலுவலர் - தோட்டக்கலை அலுவலர்கள் 133 பேருக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜூன் 30-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், நேற்று (29.6.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையில் 85 தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் 48 வேளாண்மை அலுவலர்கள் பணியிடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் உள்ளிட்ட பல்வேறு தேர்வு முகமைகள் வாயிலாக அரசுத் துறைகளில் பல்லாயிரக்கணக்கான பணியிடங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக, வேளாண்மை உழவர் நலத்துறையில் காலியாக உள்ள வேளாண்மை அலுவலர் மற்றும் தோட்டக்கலை அலுவலர்பணியிடங்களை நிரப்பிடும் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் வாயிலாக 2023 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட தேர்வு மூலம் 85 தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் 48 வேளாண்மை அலுவலர்கள் பணியிடங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை முதல மைச்சர் அவர்கள் நேற்றையதினம் வழங்கி வாழ்த்தினார். இதன்மூலம், வேளாண்மை-உழவர் நலத்துறையில் காலிப் பணியிடங்கள் நிரப்பப்பட்டு, அரசின் நலத்திட்டங்கள் விவசாயப் பெருங்குடி மக்களுக்கு விரைவில் சென்றடைவது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

புதிதாக அரசுப் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு, பணிநியமன ஆணைகளைப் பெற்றுக் கொண்ட தோட்டக்கலை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை அலுவலர்கள் இப்பணியிடங்களுக்கு முறையாக தேர்வு நடத்தி, குறிப்பிட்ட காலத்திற்குள் முடிவுகளை வெளியிட்டு, பணிநியமன ஆணைகள் வழங்கியதற்காக முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழ்நாடு அரசிற்கும் தங்களது நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில், வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, வேளாண்மை -உழவர் நலத்துறை சிறப்புச் செயலாளர் முனைவர். பொ.சங்கர், வேளாண்மை இயக்குநர் பா.முருகேஷ், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் பெ.குமாரவேல் பாண்டியன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தொழிற்பயிற்சி நிலையங்களில் (ஐ.ஐ.டி) பயிற்சியாளர்கள் நேரடி சேர்க்கை!

## வேலை வாய்ப்பு - பயிற்சித்துறை ஆணையர் அறிவிப்பு!

*சென்னை, ஜூன் 30-*

*தமிழகத்தில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் 102 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 305 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 20242025ம் கல்வியாண்டிற்கான பயிற்சியாளர்கள் சேர்க்கை செய்வதற்கான இணையதள கலந்தாய்வு தற்போது 28.06.2024 உடன் நிறைவு செய்யப்பட்டது.*

*இந்நிலையில் மாணவர்களின் நலன் கருதி தற்போது 8ம் மற்றும் 10ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கான நேரடி சேர்க்கை 01.07.2024 முதல் 15.7.2024 வரை இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் நடைபெறவுள்ளது*

*மாணவர்கள் தாம் விரும்பும் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் சென்று தாம் விரும்பும் தொழிற்பிரிவை தெரிவு செய்து தொழிற்பயிற்சி நிலையங்களில் சேரலாம்*

*சென்ற ஆண்டுகளில் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்ற பயிற்சியாளர்களில் 80% பேர் பல முன்னணி தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பை பெற்றுள்ளனர். அரசுத் தொழிற்பயிற்சி நிலையங்களில் இன்றைய தொழிற்சாலைகளுக்கு தேவையான தொழில் 4.0 உள்ளிட்ட பல நவீன தொழிற்பிரிவுகளில் தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இந்த அறிய வாய்ப்பை மாணவர்கள் பயன்படுத்திக் கொள்ளக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.*

*இது தொடர்பாக ஏதேனும் ஐயம் ஏற்படும் நேர்வில் கீழ்காணும் அலைபேசி எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம்.*

*அலைபேசி எண் மற்றும் whatsapp எண் : 9499055689*

*இவ்வாறு வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை ஆணையர் தெரிவித்துள்ளார்.*